DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | |
|---|---|
| Calender | } |
| Miscellaneous | } |
| Preliminary Register | } |
| Sessions | } Case No.SC.171/2019 |
| Deposition of Witness | { PW.7 |
| | { Prosecution |
| | { |
| Name | : ரமேஷ் |
| Father's Name | :--- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.11.2024.

2024 ம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.7 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

1, 12, 13 மற்றும் 22 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

முதல் விசாரணை

நான் குள்ளமூப்பன்காட்டில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். அ.சா.1 முதல் 4 வரையான சாட்சிகளை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.2 சடையனுக்கு 2 மகன்கள். முதல் மகன் பெயர் முருகேசன், இளைய மகன் பெயர் சின்னசாமி.

சின்னசாமி இறந்த பின்பு அவரது மனைவி பேபி நிலத்தை பாகம் பிரித்து கொடுக்குமாறு சடையனிடம் கேட்டு வந்தார். அதன் காரணமாக அடிக்கடி பிரச்சனை இருந்து வந்தது. குழந்தைகள் பெரியவர்கள் ஆன பின்பு நிலத்தை பிரித்து கொடுப்பதாக சடையன் சொல்லிவிட்டார். இந்த சமயத்தில் 2.25 ஏக்கர் நிலத்தை சடையன் மூத்த மகன் முருகேசன் பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார். அதன் பிறகு அதேபோல் எனக்கும் செய்து கொடுக்க வேண்டும் என்று பேபி அடிக்கடி தகராறு செய்து வந்தார். அடிதடி நடந்து சடையனின் கையையும் உடைத்துவிட்டார்கள். பின்பு சுமார் 3 வருடங்கள் கழித்து சடையனை நிலத்தடி நீர் சோதிப்பதற்கு என்று அழைத்து சென்று மிரட்டி, சித்திரவதை செய்து பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டதாக சடையன் என்னிடம் சொன்னார். நான் சடையன் வீட்டிற்கு சென்ற போது அவர் என்னிடம் இந்த விவரத்தை சொன்னார். பின்பு சிறிது காலம் கழித்து ஒரு நாள் சடையன் காட்டிற்குள் சுமார் 100 பேர் சேர்ந்து டிராக்டர், பொக்லைன் வைத்து தென்னை மரங்கள், தண்ணீர் தொட்டி, தார்சு வீடு, ஓட்டு வீடு ஆகியவற்றை இடித்து கொண்டிருந்தார்கள். அந்த நபர்கள் தான் ஆஜர் எதிரிகள். நான் அது பற்றி அங்கிருந்தவர்களிடம் கேட்டதற்கு அந்த நிலத்தை பரமசிவம் என்பவர் கிரையம் வாங்கி வீட்டு மனைகள் பிரிப்பதாக சொன்னார்கள். இது சம்பந்தமாக முருகேசன் போலீஸ் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 என் மைத்துனர். நான் கூளையன் காட்டில் வசிப்பதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. முருகேசன் நிலத்தில் இருந்த கட்டிடங்களை சேதப்படுத்தியதாக நான் சொல்லும் சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. போலீசார் குள்ளமூப்பன்காட்டில் வந்து என்னை விசாரித்தார்கள். நான் சொல்லும் சம்பவம் நடந்து உடனடியாக முருகேசன் போலீஸ் புகார் கொடுத்துவிட்டாரா என்றால் ஆமாம். புகார் கொடுத்து உடனடியாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அடிக்கடி சண்டை நடந்து சடையன் கையை உடைத்துவிட்டதாக நான்

போலீஸ் விசாரணையின் போது சொன்னேன். நிலத்தடி நீர் சோதிப்பதற்கு என்று அழைத்து சென்று அவரிடம் பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்று சடையன் என்னிடம் சொன்னதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சுமார் 100 பேர் சேர்ந்து டிராக்டர், பொக்லைன் வைத்து தென்னை மரங்கள், தண்ணீர் தொட்டி, தார்சு வீடு, ஓட்டு வீடு ஆகியவற்றை இடித்து கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரிகள் அங்கிருந்ததாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 என் மைத்துனர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Sd/-ரமேஷ்.

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.